2005 செப்டம்பர் 28]

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஒத்திவைப்பு தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். கூட்டத்தொடர் முடியப்போகிறது. எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அறிவிப்பாரா? (குறுக்கீடு)*

(ஆ) காவிரி கடைமடைப் பகுதிகளின் பாசனத்திற்குத் தண்ணீர்

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விவசாயிகள் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், மேட்டூரிலே தண்ணீர் திறந்துவிட்டதனாலே. அநேகமாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் போன்ற மாவட்டங்களிலே நேரடி விதைப்பு இருந்தது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், இன்றுவரையில் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போகவில்லை. நிறைய பிரச்சினையாக இருக்கிறது. ஆதலால், அந்தத் தண்ணீரைக் கொஞ்சம் அதிகப்படியாகத் திறந்துவிட்டு இந்த ஒரு மாதம் (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், இந்த ஒரு மாதம் தண்ணீர் இருந்தால், அடுத்த மாதம் season நமக்கு தொடங்கிவிடும், தண்ணீர் தேவைப்படாது. நீங்கள் முறைவைத்து தண்ணீர் விடலாம். நேரடி விதைப்பு இருக்கிறதனாலே அந்த விவசாயிகள் நிறைய பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லையென்று தொடர்ந்து தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு கேட்கிறார்கள். அதனாலே தண்ணீர் திறந்துவிடுவதை அதிகப்படுத்தி, எல்லா கடைமடைப் பகுதிகள் வரைக்கும் தண்ணீர் சென்றடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து, காவிரி டெல்டா பாசனத்திற்காக 18,000 கன அடி தண்ணீர் விடுவிக்கப்பட்டு விவசாய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடைமடைப் பகுதிகளுக்கு நீர் வந்து சேரவில்லை என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்து சேர்ந்த உடனே, 24,000 கனஅடியாக விடுவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) முறைவைத்து பாசனம் செய்து வந்த*

TRUTH ALONE TRIUMPHS